# இந்திய உயர் ஸ்தானிகராலயம்
# கொழும்பு

## ஊடக அறிக்கை

## இந்தியாவின் 77 ஆவது குடியரசு தினக் கொண்டாட்டங்கள்

இந்தியாவின் 77 ஆவது குடியரசு தினம் கொழும்பிலுள்ள இந்திய உயர் ஸ்தானிகராலயத்தால் 2026 ஜனவரி 26 ஆம் திகதி கொழும்பில் கொண்டாடப்பட்டது. உலகின் மிக நீளமான எழுதப்பட்ட அரசியலமைப்பான இந்திய அரசியலமைப்பு 1950 ஜனவரி 26 ஆம் திகதி நடைமுறைக்கு வந்தமையை இச்சந்தர்ப்பத்தில் நினைவில் கொள்ளலாம். இந்த அரசியலமைப்பின் முன்னுரையானது இந்தியாவை ஒரு இறையாண்மை, சோசலிச, மதச்சார்பற்ற, ஜனநாயக குடியரசாகப் பிரகடனப்படுத்துகிறது.

2. இத்தருணத்தில் இலங்கைக்கான இந்திய உயர் ஸ்தானிகரின் வாசஸ்தலமான இந்திய இல்லத்தில் உயர் ஸ்தானிகர் கௌரவ சந்தோஷ் ஜா அவர்கள் இந்தியாவின் தேசியக் கொடியினை ஏற்றி வைத்து அணி வகுப்பு மரியாதையினையும் பார்வையிட்டிருந்தார். அத்துடன் இந்திய ஜனாதிபதி அவர்களது குடியரசு தின உரையின் முக்கிய அம்சங்களும் உயர் ஸ்தானிகரால் இங்கு வாசிக்கப்பட்டது.

3. இந்நிகழ்வுகளில் இலங்கை கடற்படையினரின் இசைக்குழாமினர் தேசப்பற்று பாடல்களை இசைத்திருந்த அதேசமயம் உயர் ஸ்தானிகராலயத்தின் கலாசார பிரிவான சுவாமி விவேகானந்தா கலாசார நிலையம், இந்தியாவின் செழிப்பான பன்முகத்தன்மையை கொண்டாடும் வகையில் நடன மற்றும் இசை ஆற்றுகைகளுடனான ஒரு கலாசார நிகழ்வினையும் ஒழுங்கமைத்திருந்தது. இந்தியாவின் தேசியப் பாடலான 'வந்தே மாதரம்' பாடலின் 150ஆவது ஆண்டு நிறைவை இந்த ஆண்டு குறிக்கும் நிலையில் இந்த வருடமும் ஒரு முக்கியத்துவமிக்க ஆண்டாக கருதப்படுகின்றது. 1875 ஆம் ஆண்டு பங்கிம் சந்திர சாட்டர்ஜி அவர்கள் எழுதிய வந்தே மாதரம் பாடல் பின்னர் 'ஆனந்தமத்' நாவலில் இணைக்கப்பட்டது, வந்தே மாதரம் என்பதன் அர்த்தம் "தாயே, நான் உன்னை வணங்குகிறேன்" என்பதாகும். காலத்தால் அழியாத இப்பாடல் தாய்நாட்டிற்கான ஒரு இதயபூர்வமான அஞ்சலியாகும். இந்த தனித்துவமிக்க கீதத்திற்கு மரியாதை செலுத்தும் வகையிலான நிகழ்ச்சிகள், அதன் மெல்லிசையை மட்டுமல்ல, அன்பு, பயபக்தி மற்றும் ஒற்றுமையின் நீடித்த செய்தியையும் பிரதிபலித்தன.

4. முன்னதாக இந்நாளில் இந்திய உயர் ஸ்தானிகரும் உயர் ஸ்தானிகராலய அதிகாரிகளும் இந்திய அமைதிப் படையினரின்

நினைவுத் தூபியில் இந்திய அமைதிப்படையைச் சேர்ந்த தியாகிகளுக்கு அஞ்சலி செலுத்தியிருந்தனர். அத்துடன் குடியரசு தினத்தை முன்னிட்டு இந்தியா இலங்கை இடையிலான நிலையான கலாசார பிணைப்புகளை கொண்டாடும் முகமாக “காலத்தால் அழியாத பொலிவூட் மெல்லிசைப் பாடல்கள்: இலங்கையில் அநுராதா பௌத்வால் நேரடி இசை நிகழ்ச்சி” 2026 ஜனவரி 23 ஆம் திகதி ஒழுங்கமைக்கப்பட்டிருந்தது. மேலும், இந்திய கரையோரக் காவல் படையின் இரு கப்பல்களான வராஹ மற்றும் அதுள்யா ஆகியவையும் இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டதுடன் 2026 ஜனவரி 24-27 காலப்பகுதியில் கொழும்பு மற்றும் காலிக்கான விஜயங்களை மேற்கொள்ளவுள்ளன.

5. இந்தியாவின் 77 ஆவது சுதந்திர தினத்தை முன்னிட்டு இன்று மாலை இந்திய இல்லத்தில் சம்பிரதாயபூர்வமான வரவேற்புபசாரம் ஒன்றும் ஒழுங்கமைக்கப்பட்டுள்ளது. இலங்கையின் சகல துறைகளையும் சேர்ந்த பிரமுகர்கள் இந்நிகழ்வில் கலந்து கொள்வார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது.

6. இதேவேளை கண்டியில் உள்ள துணை உயர் ஸ்தானிகராலயம் யாழ்ப்பாணம் மற்றும் அம்பாந்தோட்டையில் உள்ள இந்திய கொன்சுலேட் ஜெனரல் காரியாலயங்கள் ஆகியவையும் விசேட நிகழ்வுகளை ஒழுங்கமைத்து இந்தியாவின் 77 ஆவது குடியரசு தினத்தை அனுஷ்டித்தமை குறிப்பிடத்தக்கது .

***

கொழும்பு
26 ஜனவரி 2026